VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

உழவர்
சிந்தனைக் களஞ்சியம்

மலர் 6 | சிறப்பிதழ் | ஜுன் 2022

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்







வாணவராயர்
வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

✳ மலர் 6 ✳ ஜூன் 2022 (வைகாசி – ஆனி) ✳ சிறப்பிதழ்


| | | |
|---|---|---|
| வெளியீடு | : | **வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்**<br>மணக்கடவு, பொள்ளாச்சி – 642 103 |
| நிறுவனர் | : | அருட்செல்வர் முனைவர் **நா. மகாலிங்கம்** |
| தலைவர் | : | முனைவர் **ம. மாணிக்கம்**<br>என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி |
| தாளாளர் | : | திருமதி. **கி. கற்பகவள்ளி**<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| ஊக்கம் | : | முனைவர் **சி. இராமசாமி,** பி.எச்.டி.,<br>செயலர், என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி<br><br>முனைவர் **நா. கெம்பு செட்டி,** பி.எச்.டி.,<br>இயக்குனர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br><br>முனைவர் **ந. குமாரவடிவேல்,** பி.எச்.டி.,<br>முதல்வர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| ஒருங்கிணைப்பாளர் | : | முனைவர் **கா. காளிதாஸ்,** உதவிப் பேராசிரியர்<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| தொகுப்பு | : | முனைவர். **கோ. தாமோதரன்**<br>முனைவர். **சி. கிருஷ்ணமூர்த்தி**<br>முனைவர். **ரா. முத்துகிருஷ்ணன்**<br>முனைவர். **டி.ஆர். மஞ்சுளா**<br>உதவிப் பேராசிரியர்கள்<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| வடிவமைப்பு | : | திரு. **எஸ். சிற்பி பால சுப்ரமணியம்**<br>திரு. **வெ. பிரவீன்கார்த்திக்**<br>திரு. **பா. ஹரிபிரசாத்**<br>விரிவுரையாளர்கள்<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| விநியோகித்தல் | : | திரு. **ஆ. குமாரச் செல்வன்,** உதவி நூலகர்<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |

# பொருளடக்கம்


| வ.எண் | கட்டுரைகள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1. | வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியின் கிராம தங்கல் திட்டம் கிராமப்புற தொழில் முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டுத்திட்டம் | ... | 3 |
| 2. | இயற்கை விவசாயின் 'வெற்றிப்பயணம்' | ... | 5 |
| 3. | மங்கை பாதம்பட்டால் மண்ணும் பொன்னாகும்!! | ... | 7 |
| 4. | தென்னையில் இயற்கை வேளாண்மை ... | ... | 8 |
| 5. | ஏற்றுமதியில் அசத்தும் ' கிராமத்து பெண் தொழில் முனைவோர் ' | ... | 10 |
| 6. | இயற்கையை நேசிப்பவனும் நானே ... இயற்கை வேளாண்மையுடன் வாழ்பவனும் நானே ... | ... | 11 |
| 7. | ஒருங்கிணைந்த பண்ணை விவசாயி திரு. பாட்டதுரைக் கவுண்டரின் வெற்றிக் கதை... | ... | 13 |
| 8. | உயிரிழந்த நிலம் உயிர் பெற இயற்கை விவசாயம் !! | ... | 15 |
| 9. | காலம் கடந்து பேசக்கூடிய காளான் கதைகள்... | ... | 17 |
| 10. | தற்சார்பு வாழ்வியல் | ... | 19 |
| 11. | பவானி வட்டாரத்தில் கிராம தங்கல் திட்டம் | ... | 22 |
| 12. | மூலிகைகளும் அவற்றின் மருத்துவ குணங்களும்... | ... | 23 |
| 13. | கல்லூரி நிகழ்வுகள் | ... | 24-32 |



உழவர் சிந்தனைக் களஞ்சியம் இதழில் வரும் கருத்துக்களுக்கு
அதன் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்



**தொடர்புக்கு : +91 74026 18016, மின்அஞ்சல் : edp@via.ac.in**
**வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், பொள்ளாச்சி - 642 103.**

அச்சிட்டோர் :
ருக்மணி ஆப்செட் பிரஸ்
E-32 சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், கோவை - 641 021.
போன் 0422 - 2672789, 2672435 மெயில் : office.rukmaniop@gmail.com

# வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியின் கிராம தங்கல் திட்டம் கிராமப்புற தொழில் முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டுத்திட்டம்

கற்க வேண்டியதைக் குற்றமறக்கற்று அதன் படி வாழவேண்டும் என்பது தான் வள்ளுவன் வாக்கு. அதற்கேற்றாற் போல் உருவாக்கப்பட்டது தான் கிராம தங்கல் திட்டம். கிராமப்புற தொழில் முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டுத்திட்டமானது கிராமப்புற தொழில் முனைவோர்க்கு விவசாயத்தில் உள்ள நடைமுறை விவசாய அனுகுமுறைகளை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் மூலம் அனைத்து வேளாண் கல்லூரிகளிலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பட்டதாரிகள் சுயதொழில் மேற்கொள்வதற்கும், கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், உணவு பாதுகாப்பிற்கும் விவசாயத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான திறன்களை அளிக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற விழிப்புணர்வு பணி அனுபவம் மாணவர்களுக்கு கிராமப்புற சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வதற்கும், விவசாயிகள் பின்பற்றும் விவசாய தொழில் நுட்பங்கள் பற்றி அறியவும், ஊரக வளர்ச்சிக்காக மாணவர்கள் விவசாயக் குடும்பங்களுடன் இணைந்து பணியாற்றும் திறன் மற்றும் மனப்பான்மையை வளர்க்கவும் உதவுகிறது. மேலும் விவசாய மாணவர்களுக்கு கிராமத்தின் இயற்கை சூழலை அறியவும், அவர்களின் பிரச்சனைகளைக் கண்டறியவும், வேளாண் விரிவாக்க கருவிகளை பயன்படுத்தி நவீன விவசாய தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கவும் வழிவகை செய்கிறது. மாணவர்கள் விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி தொடர்பான பல்வேறு திட்டங்களைப் பற்றி அறியவும் மற்றும் அவற்றை செயல்படுத்துவதில் பங்கேற்கவும் வாய்ப்பளிக்கிறது. விவசாயிகளின் வயலில் நிலவும் பல்வேறு பிரச்சனைகள் பற்றி மாணவர்கள் பார்த்து, தெரிந்து கொள்வதுடன் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த அறிவியல் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதில் திறமையும் நம்பிக்கையும் பெற உதவுகிறது. இது விஞ்ஞானிகளின் மேற்பார்வையில் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**கிராமப்புற விழிப்புணர்வு பணி அனுபவத்தின் முக்கிய நோக்கங்கள்:**

1. மாணவர்களுக்கு கிராமப்புற சூழ்நிலையில் வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களை அறிய செய்தல்.
2. மாணவர்களுக்கு விவசாயிகளின் சமுதாய மற்றும் பொருளாதார நிலைமைகளையும் விவசாயம் சார்ந்த பிரச்சனைகளையும் நன்கு அறிய செய்தல்.
3. மாணவர்களுக்கு செயல்முறை பயிற்சியின் மூலமாக நடைமுறையில் நிலவும் பிரச்சனைகளை அறியச் செய்தல் மற்றும் அதற்கான தீர்வு காணச் செய்தல்.

4. மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப திறன்களை வளர்க்கவும், வேளாண் விரிவாக்க கருவிகளைப் பயன்படுத்தி தொழில் நுட்பத்தை விவசாயிகளிடம் கொண்டு செல்லும் திறன்களை வளர்க்கவும் உதவுதல்.

5. சிக்கலான பிரச்சனைகளை சரி செய்யும் அளவிற்கு மாணவர்களின் திறமையையும் நம்பிக்கையையும் வளர்த்தல்

6. நடைமுறையில் உள்ள விரிவாக்கம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களைப் பற்றி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல்.

மொத்தம் 75 நாட்கள் கொண்ட இத்திட்டத்தில் 60 நாட்கள் கிராம தங்கல் திட்டமும், 5 நாட்கள் வேளாண் உதவி இயக்குநருடன் இணைந்து பல்வேறு திட்டங்களையும், வேளாண்துறையின் குறிக்கோள் முதலானவை பற்றியும் அறிந்து கொள்கின்றனர்.

அடுத்த 5 நாட்கள் வேளாண் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து அவற்றை பற்றி அறியவும், கடைசி 5 நாட்கள் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்குச் சென்று மேலாண்மை திறனை வளர்க்கவும் உதவுகிறது.

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் இறுதியாண்டு மாணவர்கள் குழுக்களாக பிரிந்து உடுமலை, கிணத்துக்கடவு தாராபுரம், பொங்கலூர், ஆனைமலை, பவானி, மொடக்குறிச்சி, சென்னிமலை, அந்தியூர், டி என் பாளையம், கொடுமுடி முதலான வட்டங்களில் இத்திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

முனைவர் கா. சங்கரி, உதவிப் பேராசிரியர்,
வேளாண்மை விரிவக்கம்,
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், மணக்கடவு,
பொள்ளாச்சி✦

## உழவர் பொங்கல்!

காடு திருத்தி, கழனி அமைத்து,
எருது கொண்டு ஏர்பூட்டி,
மண்புரட்டி, நீர்பாய்ச்சி, நாற்று நட்டு, களை பறித்து,
மண்ணின் மணம் சிதைக்காமல், வளம் குன்றாமல்,
இயல்பான செறிவுகாக்க இயற்கை எருதந்து,
பயிர் வளர்த்து, கதிர் அறுத்து, நெல்மணி சேர்த்து,
ஊர்பசி ஆற்றும் உழவனுக்கோர் திருநாள்!
உடனுழைத்த காளைக்கும் ஒருநாள்! உலகம் தழைக்க
ஒளி தரும் சூரிய பகவானுக்கு,
நன்றி தெரிவிக்கும் நன்னாள்!
வீரம், மானம், காதல்
வாழ்வென கொண்டு தொன்மை தமிழால்,
தரணியாண்ட தமிழனின் தனிப்பெரும் விழாநாள்!
பொங்குக உழவர் பொங்கல் இந்நாளில்!
மங்கலம் தங்குக எந்நாளும்!

ரஞ்சித்குமார்
ஆய்வாக உதவியாளர்
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி✦



# ஒரு இயற்கை விவசாயின் "வெற்றிப்பயணம்"

**இயற்கை விவசாயி :**

ஈரோடு மாவட்டம், தூக்க நாயக்கன் பாளையம் பகுதியில் வாழ்ந்து வரும் திரு. ஆறுமுகம் (இளங்கலை வேதியல், வயது 64) தனது 2 ஏக்கர் நிலத்தில் இயற்கை முறை விவசாயத்தை கடந்த 14 வருடங்களாக பின்பற்றி வருகிறார். இவர் 2008 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பல்லடம் பகுதியில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சுபாஷ் பாலேக்கர் உரையில் உத்வேகமாகி அவரை முன்னுதாரனமாக வைத்து இயற்கை விவசாயத்தைப் பின்பற்ற தொடங்கினார். அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து இயற்கை விவாசாயத்தை மட்டுமே கடைபிடித்து வருகிறார். இவர் தனது இயற்கை முறை விவசாயத்திற்காக ஒரே ஒரு காங்கேயம் இனத்தைச் சேர்ந்த நாட்டு வகை மாட்டை மட்டுமே வளர்த்து வருகிறார். இவர் இளங்கலை வேதியியல் படித்துள்ளதால் இரசாயன உரங்களின் தீமைகளை அறிந்து அவற்றை அறவே நீக்கிவிட்டு, நாட்டு மாட்டின் மூலம் கிடைக்கும் சாணம், கோமியம் ஆகியவற்றைக் கொண்டு சில கரைசல்களைத் தயார் செய்து அவற்றை மட்டுமே உபயோகபடுத்தி வருகிறார்.

**பயிர்கள் :**

1. வாழை, (செவ்வாழை) 2. மஞ்சள், (சேலம் லோக்கல்) மற்றும் பி எஸ் ஆர் 10), 3. மாட்டுத்தீவனம் 4. ஆமணக்கு, (ஊடுபயிர்).

**கரைசல்கள் :**

1. ஜீவாமிர்தம் – பயிர் ஊக்கி (ம) நுண்ணுயிர்
2. பீஜாமிர்தம் – கிழங்கு (ம) விதை நேர்த்தி
3. அக்னி அஷ்தரம் – பூச்சி விரட்டி



**ஜீவாமிர்தம் தயாரிக்க தேவையானவை :**

1. 10 கிலோ சாணம்
2. 10 லி கோமியம்
3. 1 கிலோ பயறு மாவு
4. 1 கிலோ நாட்டுச்சர்க்கரை
5. 1 கைப்பிடி மண்

இவர் ஜீவாமிர்தக்கரைசலை சொட்டு நீர்க் குழாய்கள் மூலம் மண்ணில், வாரத்திற்கு ஒரு முறையும், இலைவழித் தெளிப்பில் 100மி.லி / 10 லி தண்ணீரில் கலந்து மாதத்திற்கு ஒரு முறையும் பயன்படுத்தி வருகிறார். இவர் இயற்கை முறையில் தயார் செய்தக் கரைசல்களை பயன்படுத்துவதால், இவரின் வயல்களில் பூச்சி (ம) நோய்களின் தாக்கம் குறைந்து காணப்படுகிறது.

**மஞ்சளின் அசுர வளர்ச்சி :**

மஞ்சள் பயிருக்கு 50 சதவிகித நிழல் தரும் வகையில் வயலில் ஆங்காங்கே குறிப்பிட்ட இடைவெளியில் ஆமணக்கு செடிகளை வளர்த்து வருகிறார். அதனால் மஞ்சள் பயிர் நன்கு வளர்ந்து மற்றவர்கள் பார்வையில் ஆச்சரியமளிக்கிறது.

**இயற்கை விவசாயத்தின் பயன்கள் :**

1. குறைந்த முதலீடு போதுமானது.
2. மண் வளத்தை மேம்படுத்த உதவுகிறது.
3. தரமான பொருட்கள் கிடைக்க உதவுகிறது.
4. மகசூலை அதிகரிக்க ஏதுவாகிறது.

விவசாயி திரு. ஆறுமுகம் (இளங்கலை வேதியியல்)
போன் : 98425 10656

இப்படிக்கு
கிராம தங்கல் திட்ட மாணவர்கள்
தூக்கநாயக்கன்பாளையம்



# மங்கை பாதம்பட்டால் மண்ணும் பொன்னாகும்!!



இதை ஆண்களால் மட்டும் தான் செய்ய முடியும், பெண்கள் இதற்கு சரிபட்டு வரமாட்டார்கள் என்ற கற்பிதம் விவசாயத் துறையையும் விட்டு வைக்கவில்லை. நாற்று நடுதல், களையெடுத்தல், கதிர் அறுப்பு என்று பல்வேறு விவசாய வேலைகளில் பெண்கள் ஈடுபட்டாலும் விவசாயத்தை முழுமையாக செய்து முடிக்கும் திறமையும், தெளிவும் ஆண்களுக்கு மட்டும் தான் என்ற எண்ணத்தை தன் மகத்தான வெற்றியால் தவிடு பொடியாக்கிருக்கிறார் கவிதா!! திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம் மேட்டுசாலை தேவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த உ. கவிதா, வயது 43, இவர் 30 ஏக்கர் நிலத்தில் நெல், வெங்காயம், மா, தென்னை, மக்காச்சோளம் முதலியவற்றை சாகுபடி செய்து வருகிறார். சுமார் 15 ஏக்கர் நிலத்தில் சாவித்திரி (7 ஏக்கர்) மற்றும் ADT 38 நெல் இரகத்தை பயிர் செய்துள்ளார் மற்றும் 2 ஏக்கர் நிலத்தில் வெங்காயம், 10 ஏக்கர் நிலத்தில் 420 தென்னை மரங்களையும், 3 ஏக்கரில் மா சாகுபடியும் செய்துள்ளார். தித்திக்கும் சுவையில் திகட்டாத இனிப்புடன் தின்ன, தின்ன சலிக்காத ஆறு ரகமான மா சாகுபடியில் அசத்தும் பெண் விவசாயி இவர்! மணக்கும் மல்கோவா, சிவந்த செந்தூரம், நித்தம் ஈர்க்கும் நீலம், பார்த்தால் பசிக்கும் பங்கனபல்லி, மனதை மயக்கும் மல்லிகா, ஏற்றுமதிக்கு ஏற்ற அல்போன்சா!! இவ்வாறு இனிப்பிலே அறுசுவை கொண்ட மாங்கனிகளை 4 ஏக்கரில் சாகுபடி செய்து லாபம் ஈட்டி வருகிறார். ஒவ்வொரு ரகங்களிலும் 45 மரங்களை வைத்து வளர்த்து வருகிறார். இவர் மா சாகுபடியை சொட்டு நீர் பாசனம் வழியாக மேற்கொண்டு வருகிறார். அவர் கூறியதாவது, நல்ல கன்றுகளை தேர்ந்தெடுக்க வேண்டும். செடிகள் நன்றாக வளரும் வரை அடிக்கடி நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும். நடப்பட்டு வளரும் வரை அடிக்கடி நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும். 1 வருட வயதுள்ள மரங்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்சுதல் போதுமானது. மாங்கன்று உள்ள நிலத்தில் தண்ணீர் தேங்கக்கூடாது.

பாசனத்தை பொருத்தவரை சொட்டு நீர்ப் பாசனம் சிறந்தது. மரத்தின் வளர்ச்சி, மண்ணின் தன்மை, பாசன வசதி ஆகியவை நன்றாக இருந்தால், மூன்றாம் ஆண்டிலேயே மரங்கள் பூக்கத் தொடங்கி விடும். மாமரங்கள் மூன்று வருடத்திற்கு ஒரு முறை கவாத்து செய்வதன் மூலம் சூரிய வெளிச்சம் மற்றும் காற்று உட்கிளைகளுக்குக் கிடைத்து, மரம் நன்றாக காய்ப்பிடிக்கும். நன்றாக விளைந்த காய்களை 80 சதவீதம் முத்தின நிலையில் அறுவடை செய்ய வேண்டும்.

கழனியில் மகள் !  
களைபறித்து கழப்பையைக் கரம்  
பிடித்தவள்!  
கலனியின் குறிப்பறிந்து விளைச்சல்  
கண்டவள்!  
கலியுகத்திலும் விவசாய வளர்ச்சி  
படைத்தவள்!  
எதிர்வினையிலும் எதிர் நீச்சல் போடும்  
என்னவள்!

இப்படிக்கு  
கிராம தங்கல் திட்ட மாணவிகள்  
தாராபுரம், திருப்பூர் மாவட்டம்

# தென்னையில் இயற்கை வேளாண்மை



வாணவராயர் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் 12 பேர் கிராமத்தங்கல் திட்டத்திற்காக 27.12.2021 அன்று திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்திற்கு சென்றனர்.

**மண் வகை** : கரிசல் மண் மற்றும் செம்மண்

**முக்கிய பயிர்கள்** : நெல், மக்காச்சோளம், கொண்டைக்கடலை, நிலக்கடலை, கரும்பு, பருத்தி, தக்காளி, பீட்ரூட், மிளகாய், தென்னை, பாக்கு மற்றும் பந்தல் வகை காய் கறிகள்.

**நடைமுறையில் உள்ள திட்டங்கள்**

1. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்
2. தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்
3. முதலமைச்சரின் உலர் நிலத்திட்டம்
4. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
5. கிஷான் கிரெடிட் கார்டு திட்டம்

**பங்கேற்ற பயிற்சிகள்**

1. கிசான் கோஸ்தீஸ் – விவசாய தொழில் நுட்ப மேலாண்மை முகாம் உயிர் உரங்கள், சூரிய ஒளியால் இயங்கும் பம்புகள் பற்றிய விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.
2. தென்னையில் இயற்கை வேளாண்மை மேற்கொள்ளும் முறைகளைப் பற்றி மானுபட்டி **அப்துல்லா** ஐயா தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வேளாண் பொறியாளர் திரு. பிரிட்டோ ராஜ் அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். அக்கூட்டத்தில் மாணவிகளும் பங்கேற்று காண்டாமிருக வண்டு, சிவப்புக்கூன் வண்டு மற்றும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ ஆகியவற்றை இயற்கை முறையில் கட்டுப்படுத்துவது பற்றி செயல் முறை விளக்கம் அளித்தனர்.

**காண்டாமிருக வண்டினைக் கட்டுப்படுத்தும் இயற்கை முறைகள்**

ஒரு பங்கு வேப்பங்கொட்டையை பொடியாக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் இரண்டு பங்கு மணலை கலந்து கொள்ள வேண்டும். அவற்றை ஒரு மாதத்திற்கு 150 கிராம் என்ற விகிதத்தில் வண்டுகள் தாக்கப்பட்ட மரத்தின் குருத்தில் வைத்தல் வேண்டும். ஆண்டிற்கு ஒரு மரத்திற்கு 5 கிலோ வேப்பம்புண்ணாக்கை இரு தவணையில் இட மரம் செழிப்பாக இருக்கும். பச்சை மஸ்கார்பைன் பூஞ்சாணம் – 5 மி.லி, மஸ்கார்பைன் பூஞ்சாணத்தை 1 லி தண்ணீரில் கரைத்து அந்த கரைசலை எருக்குழியில் தெளிக்க வேண்டும். மஸ்கார்பைன் – பூஞ்சாணம் காண்டாமிருக வண்டின் புழுக்கள் மீது வளர்ந்து அதை அழிக்கிறது.

**தென்னை - ஆமணக்கு பொறி**

பொறியைப் பயன்படுத்தி காண்டாமிருக வண்டு, சிவப்பு கூன் வண்டினைக் கட்டுப்படுத்தலாம்.

**செய்முறை**

1. 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கினை 5 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். அதில் 1/4 கிலோ வெல்லத்தைச் சேர்க்க வேண்டும்.
2. 1/2 லிட்டர் கள்ளினோடு 5 கிராம் ஈஸ்ட்டினை சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். இதனைப் பானையில் ஊற்றி காடா துணியினால் மூடி இரவினில் மட்டும் திறந்து வைக்க வேண்டும்.
3. 1 ஏக்கருக்கு மூன்று இடத்தில் வைக்க வேண்டும்.

**மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த படைப்புழு மேலாண்மை**

டாக்டர். பிரபாகரன், டாக்டர். கிருஷ்ணமூர்த்தி, மற்றும் டாக்டர். சாத்தையா ஆகியோரின் தலைமையில் மானுப்பட்டியில் நடைபெற்று. கூட்டத்தில் இனக்கவர்ச்சிப் பொறி, முட்டை, ஒட்டுண்ணி பயன்பாடு (Telenomus remus) பற்றி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ யை கட்டுப்படுத்துவது பற்றிய செயல் விளக்கம் – வாளவாடி பகுதியில் நடைபெற்றது. ரூகோஸ் சுருள் வெள்ளை 'ஈ' தென்னை இலையின் அடிப்பகுதியில் நீள்வட்ட வடிவில் அமைந்திருக்கும். இவை தேன் போன்ற திரவத்தை சுரக்கின்றன. இதனால் தென்னை இலையின் மேற்பகுதியில் கருப்பு பூஞ்சாணம் வரத் தொடங்குகிறது. இதனால் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு மரத்தின் மகசூல் குறையும். ரூகோஸ் சுருள் 'வெள்ளை ஈ' யை இயற்கை முறையில் கட்டுப்படுத்த கிரைசோபெரீலா முட்டை தென்னை இலையின் அடிப்பகுதியில் பொறுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு 1000-2000 முட்டைகள் தேவைப்படுகின்றன. ஒரு அட்டையின் விலை ரூ. 500 இந்த முறையின் மூலம் 20-80% வரை மகசூலை அதிகப்படுத்தலாம்.

இப்படிக்கு<br>கிராம தங்கல் திட்ட மாணவிகள்<br>உடுமலைப்பேட்டை, திருப்பூர்.

# ஏற்றுமதியில் அசத்தும்

## “கிராமத்து பெண் தொழில் முனைவோர்”



சுவை ஊறுகாய் தயாரிப்பு நிறுவனம், இப்பொது **சுவை காண்டிமென்ட்ஸ்** நிறுவனம் என்று பெயரிடப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டில் திருமதி. அருணா அனுசுயா எம்.எஸ்.சியுடன் ஏ.ஆர் டிரேடர்ஸ் என்ற பெயரில் தனியுரிமையுடன் தொடங்கப்பட்டது தான் சுவை காண்டிமென்ட்ஸ்.

ஆர் ரங்கசாமி, இவரது கணவர் பாரம்பரிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இன்றும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார். சுவை ஊறுகாய்கள் உலகமெங்கும் உள்ள பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1987-ல் இந்நிறுவனத்தின் முதல் சரக்கு அப்போதே மேற்கு ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தற்போது சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

திருமதி. அருணா அனுசுயா மற்றும் அவரது கணவர் ரங்கசாமி ஆகியோர் மைசூரில் உள்ள மத்திய உணவு நுட்ப ஆராய்ச்சி நிறுவத்தின் (FTRI) தொழில் நுட்ப பயிற்சி திட்டத்தில் 30 நாட்கள் பயிற்சி பெற்று இந்நிறுவனத்தைத் தொடங்கினர்.

1995 ஆம் ஆண்டில் திரு. ஆர். ரங்கசாமிக்கு தகுதிச்சான்றிதழையும் உத்யோக ஸ்ரீ விருதையும் புதுடெல்லி நிறுவனம் வழங்கியது. கோயமுத்தூர் மாவட்ட சிறு தொழில் சங்கத்தின் கொடீசியா நிறுவனம், ஏற்றுமதி செயல்திறனுக்காக - டெக்ஸ்வெல் விருதை வழங்கி கௌரவித்துள்ளது. இந்நிறுவனத்தில் மாங்காய், எலுமிச்சை, நெல்லி முதலிய பலவகை ஊறுகாய்களும் மாங்காய், வெங்காயம், தக்காளி முதலிய பலவகை தொக்குகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இதற்கு புதுமை சேர்க்கும் வகையாக கூட்டுப்பெருங்காயத்தூள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுவை மற்றும் காவியா என்ற பெயர்களில் இந்நிறுவனத்தின் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. காவியா பிராண்டிற்கு கீழே தயாரிக்கப்படும் பொருட்கள் அனைத்து உணவகங்களிலும், விடுதிகளிலும் அதிகளவில் பயன்படுத்தப் படுகிறது. இந்தியாவில் பல மாநிலங்களிலிருந்து தரமான மூலப்பொருட்களைக் கொண்டு ஊறுகாய் தயாரிக்கப்படுகிறது.

இப்படிக்கு, கிராம தங்கல் திட்ட மாணவ / மாணவிகள்
கிணத்துக்கடவு, பொள்ளாச்சி



# இயற்கையை நேசிப்பவனும் நானே ...
# இயற்கை வேளாண்மையுடன் வாழ்பவனும் நானே ...

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தல** - குறள் 1031

கிராம தங்கல் திட்டத்தின் கீழ் நாங்கள் சென்ற தென்னியந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படும் கோவை மாவட்டம், ஆனைமலை வட்டாரத்தில் அமைந்துள்ள குக்கிராமமே **இராமச்சந்திராபுரம்.** மலையின் அடிவாரத்தில் பார்க்கும் இடமெல்லாம் பசுமைப் போர்வையைப் போர்த்தியது போன்று காட்சியளிக்கும் அக்கிராமத்தில் நாங்கள் சந்தித்த இயற்கை விவசாயியே திரு. விக்ரம் முத்து இரத்தினசபரி, முதுகலை கணினி அறிவியல் பட்டம் பெற்ற இவர் ஆரம்பத்தில் கணினித் துறையில் பணியாற்றினாலும் பின்பு வேளாண்மையின் மீது கொண்ட நாட்டத்தினால் தனது இருபத்தைந்தாம் வயதில் விவசாயப் பணியை ஆரம்பித்தார்.

“படித்ததோ கணினி அறிவியல்
பிடித்ததோ உழவு அறிவியல்’’

தனக்கு அதிக வருமானம் இல்லை என்றாலும் மற்ற உயிர்களின் பசிக்காகவே இன்னும் இரசாயனமில்லா வேளாண் நிலத்திடம் போராடிக் கொண்டு தான் இருக்கிறார். நாங்கள் அங்கு சென்றபோது அவரின் தோட்டத்தில் பார்த்து இரசித்த தென்னை மரங்கள், தித்திக்கும் கரும்பு, முக்கனிகளில் ஒன்றான வாழை, மஞ்சள், தீவனச்சோளம் மற்றும் மல்பெரி. மேலும் இயற்கை முறையில் ஆடு, மாடு மற்றும் கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் இவர் இயற்கை வேளாண்மையை மேற்கொண்டு வருகிறார். ஆரம்ப காலத்தில் மகசூல் குறைந்த போதிலும் அவரின் விடாமுயற்சியால் 2016 ஆம் ஆண்டு தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட



ஆர்கானிக் சான்றிதழை பெற்றார். இவரின் தோட்டத்தில் உழவு செய்வதே இல்லை, இரசாயன உரங்கள் தெளிப்பதில்லை, அனைத்து வேளாண் செய்முறைகளையும் இயற்கை முறையில் செய்து வருகிறார். இவர் தோட்டத்தில் மூடாக்கு, பஞ்சகாவியா, தசகாவியா, அமிர்தகரைசல் மற்றும் ஜீவாமிர்தம் ஆகியவற்றை தயாரித்து அதனை பயன்படுத்தி வருகிறார். அவர் வசிக்கும் இல்லத்தைக் கூட இயற்கை முறையில் சுண்ணாம்பு, கருப்பட்டி மற்றும் பல பொருட்களை உபயோகித்து ஏழு வருடங்களாக கட்டிவந்துள்ளார்.

**நோய்களும் அவற்றின் தடுப்பு முறைகளும்**

இவரின் தோட்டத்தில் வெள்ளை ஈ, காண்டாமிருக வண்டு ஆகிய பூச்சிகளும் கேரளா வாடல் நோயும் காணப்பட்டன. அவற்றை கட்டுப்படுத்த இயற்கை முறையில் மாட்டுச்சாணம், கோமியம் மற்றும் வேப்ப எண்ணை ஆகியவற்றை பயன்படுத்திவருகிறார்.

மேலும் இவர் இயற்கை முறையில் விலங்கு விரட்டி மற்றும் வேளாண் கழிவுகளைக் கொண்டு இயற்கை உரமும் தயாரித்து வருகிறார். உரத்தை மக்கச்செய்வதற்கு தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் புளூரோடஸ் சஜார் கஜீ என்னும் காளான் வித்துக்களைப் பயன்படுத்தி வருகிறார்.

**சாதனை மனிதர்**

தான் மட்டும் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளாமல் தன்னை சார்ந்தவர்களும் இயற்கை வேளாண்மையின் அவசியத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார். ஆரம்ப காலத்தில் நஷ்டங்களை சந்தித்தாலும் இறுதியில் அவர் மகசூலை அதிகரித்து இயற்கை வேளாண்மையில் வெற்றி பெற்றுள்ளார்.

இப்படிக்கு
கிராம தங்கல் திட்ட மாணவிகள்,
ஆனைமலை, பொள்ளாச்சி.



# ஒருங்கிணைந்த பண்ணை விவசாயி திரு. பாட்டதுரைக் கவுண்டரின்

## வெற்றிக் கதை

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேலங்காட்டுவலசு கிராமத்தில் வசிப்பவர் ஒருங்கிணைந்த பண்ணை விவசாயி திரு. பாட்டதுரைக் கவுண்டர். இவர் தனது 1 ஏக்கர் நிலத்தில் கால்நடைத் தீவனங்களை பயிர்செய்து வருகிறார். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆடு, மாடு, எருமை, கோழி ஆகிய கால்நடைகளை சிறப்பாக பராமரித்து வளர்த்து வருகிறார்.

இவர் 2001-ம் ஆண்டு செய்தித்தாளின் மூலமாக வேளாண்மை அறிவியல் நிலையம், ஈரோடு நடத்திய கால்நடை மற்றும் தீவனப்பயிர் வளர்ப்பு பற்றிய பயிற்சி நடைபெறுவதை அறிந்து ஈரோட்டில் ஒரு நாளும் கால் நடை மருத்துவக் கல்லூரியில் இரண்டு நாட்களும் மிகவும் ஆர்வத்துடன் பயிற்சி பெற்று பல்வேறு ஆலோசனைகளையும் பெற்று கொண்டார். இதன் பின்பு தான் இவருக்கு முதலீடு இல்லாமலேயே ஆடு வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் உருவானதாகக் கூறுகிறார்.

இவர் 50 வெள்ளாடுகளை வளர்த்து வருகிறார். அதில் 35 தாய் ஆடுகள், 15 குட்டிகள் மற்றும் 2 ஆண் இன ஆடுகள். ஈரோட்டில் நிகழும் காலநிலை வெள்ளாடு வளர்க்க உகந்ததாக இருப்பதால் இவர் வெள்ளாடு வளர்ப்பை செய்துள்ளார். அதன் ரகங்கள் தலைச்சேரி, கோசர், போயர் என்பவைகளாகும்.

**பராமரிப்பு முறைகள் :**

பொதுவாகப் பல் வரிசையைக் கொண்டு ஆடுகளின் வயதை நிர்ணயம் செய்யலாம். இவர் ஆடுகளை அதிக எண்ணிக்கையில் வளர்ப்பதால், சரியாகப் பராமரிப்பு முறைகளைக் கையாளுவதற்கு ஆடுகளை அடையாளம் இட்டு வளர்க்கிறார்.

**முதலீடு இல்லா ஆடு வளர்ப்பு :**

முதலீடு இல்லா ஆடு வளர்ப்பு என்பது முதலில் எந்த ஒரு முதலீடும் இல்லாமல் பெண் இனத்தை மட்டும் கொண்டு ஆடுகளை வளர்ப்பது ஆகும். அத்துடன் இவர் தன்னிடம் உள்ள 7 ஏக்கர் நிலத்தில் எந்த ஒரு உரங்களும் இல்லாமல் பசுந்தாள் உரத்தை மட்டுமே பயன்படுத்தி தீவனப்பயிர்களைப் பயிரிட்டுள்ளார்.

முதல் வருடத்தின் முடிவில் தீவனப்பயிர்களிலிருந்து விதைகளை அறுவடை செய்து விடுகிறார். பின்பு இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உள்ள இலைகளை ஆடுகளுக்கு தீவனமாகக் கொடுப்பதால் இவர் தீவனத்திற்கு எந்த ஒரு முதலீடும் செய்யத் தேவையில்லை. ஆடுகளுக்கு தீவனப்பயிர் மட்டுமல்லாமல், அவர் வசிக்கும் இடத்தில்

குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய சோளத்தட்டு கடலைக்கொடி ஆகியவற்றை வரத் தீவணங்களாக ஆடுகளுக்கு கொடுக்கின்றார்.

வெள்ளாடுகள் கீழே விழுந்த தீவனங்களையோ புற்களையோ சாப்பிடாது. எனவே இவர் வீட்டில் இருக்கும் பொழுது ஆடுகளுக்கு தீவனம் கொடுப்பதற்காகத் தீவனத் தொட்டியைப் பயன்படுத்துகிறார். மற்ற நேரங்களில் மேய்ச்சலுக்காக ஆடுகளை 4-5 மணி நேரம் ஏரி, குளம், வயல், வாய்க்கால் போன்ற பகுதிகளுக்கு அழைத்துச் செல்கிறார்.

அவ்வாறு திறந்த வெளியில் ஆடுகளை மேய்ச்சலுக்காக அழைத்துச் செல்லும் பொழுது ஆடுகள் பல்வேறு வகையான இலை தழைகளை உண்பதால் ஆடுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாகக் கூறுகிறார். இதுவரை இவர் வளர்க்கின்ற ஆடுகளுக்கு எந்த ஒரு நோயும் பெரிய அளவில் தாக்கியது கிடையாது என்றார்.

**தீவணப்பயிர் வளர்ப்பு :**

இவர் ஆடுகள் மட்டுமின்றி தீவனப் பயிர்களையும் வளர்த்து வருகிறார். பசுந்தீவனப் பயிர்களான வேலிமசால், அகத்தி, CO4, CO FS-29, CO FS - 31 போன்றவற்றை இவர் பயிரிட்டு வருகிறார். தற்போது இவர் தன்னுடைய நிலத்தில் CO4, CO FS-29, வேலிமசால் ஆகிய பயிர்களை பகுதி பகுதியாகப் பயிரிட்டு வருகிறார். அகத்தியை இவர் ஊடுபயிராகவும், எல்லைப்பயிராகவும் பயன்படுத்துகிறார்.

இவர் தன்னுடைய ஆடுகளுக்கு போதுமான தீவனத்தை வைத்து மீதமுள்ளவற்றை மற்ற விவசாய நண்பர்களுக்கு விற்பதன் மூலம் கூடுதல் வருமானத்தை ஈட்டுகிறார். அதுமட்டுமில்லாமல், இவர் விவசாய அலுவலகம் மற்றும் கல்லூரியின் விதை கோரிக்கைற்கு ஏற்ப முதல் தருணத்தில் CO4, CO FS-29 இருந்து விதை உற்பத்தி செய்து கொடுப்பதன் மூலம் அதிக லாபம் வருவதாகக் கூறுகிறார். இவர் இங்கு மட்டுமல்லாமல் கோபி KVK, ஈரோடு, நாமக்கல், கோவை ஆகிய இடங்களுக்கு விதைகளை உற்பத்தி செய்து கொடுக்கிறார்.

**ஆடு வளர்ப்பு லாபகரமானது :**

ஆடு வளர்ப்பு தொழில் மிகவும் லாபகரமானது என்கிறார் திரு. பாட்டதுரை. ஏனெனில் இவர் வளர்க்கும் 50-க்கு மேற்பட்ட ஆடுகளுக்கு இவரே தீவணப்பயிர்களை வளர்த்து, அதையே தன் ஆடுகளுக்குக் கொடுப்பதால் எந்த ஒரு உள்ளீட்டுச் செலவும் இவருக்குக் கிடையாது. மற்ற கால்நடைகளுடன் ஒப்பிடும்போது ஆடு வளர்ப்பு எளிதானது. ஆடுகள் வாழ்வதற்கு குறைந்தபட்ச இடமே போதுமானது. ஆடு வளர்ப்பில் மேலாண்மை திறன்முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே அவர் தன்னைப் போலவே ஆடு வளப்பு பற்றி நன்கு பயிற்சி பெற்ற பின்பு ஆடுகளை வளர்த்தால் நல்ல வருமானம் ஈட்டாலாம் என்கிறார் பட்டாதுரை.

**ஆடு வளர்ப்பின் நன்மைகள் :**

ஆரம்பத்தில் சிறு முதலீடு கொண்டே ஆடு வளர்ப்புத் தொழிலைத் தொடங்கலாம். ஆடு வளர்ப்பின் ஆரம்ப முதலீடு, பால் பண்ணையை விட குறைவாக இருக்கும். மேலும் ஆட்டு இறைச்சி குறைந்த கொலஸ்ட்ரால் கொண்டது. ஆடுகளின் கருவுறுதல் காலம் குறைவாக இருக்கும். இவை 16-17 மாதத்தில் பால் கொடுக்கத் தொடங்கும். பொதுவாக ஒரு பருவத்தில் ஒரு ஆடு இரண்டு குட்டிகளை போடும். ஆடுகள் எல்லா வகையான தட்ப வெப்ப நிலைகளிலும் வாழக்கூடியவை.

**பெற்ற விருதுகள் :**

இவர் இதுவரை கால்நடை வளர்ப்பு மற்றும் தீவனப்பயிர் மேலாண்மை சார்ந்த அனைத்து பயிற்சிகளிலும் கலந்து கொண்டு முறையாகப் பயிற்சி பெற்று சான்றிதழ்கள் பெற்றுள்ளார். சிறந்த முறையில் ஆடுகளை வளர்த்து வரும் இவரைப் பாராட்டும் விதமாக திரு. பாட்டதுரை அவர்களுக்கு, பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப ஆலோசனைகளை செயல்படுத்தும்; வெள்ளாட்டு பண்ணையாளர் - 2016 விருதினை இவருக்கு வழங்கி பெருமை சேர்த்தது தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்.

இப்படிக்கு
கிராம தங்கல் திட்ட மாணவர்கள்
மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம்



# உயிரிழந்த நிலம் உயிர் பெற
## இயற்கை விவசாயம் !!

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு – (குறள் 1038)

மேற்காணும் வள்ளுவனின் கூற்றிற்கிணங்க ஏர் உழுவதை விட எரு இடுதல் நல்லது. இவற்றை விட களை நீக்கிய பின், காவல்காத்தல் நல்லது.

**விவசாயக்குடிகளின் கொடிமுடி!!**

காவேரி கரையின் அரவணைப்பில், நெற்பயிர்களின் பசுமைப் போற்றியத் தோற்றத்தில் மஞ்சளின் மகத்துவம் மாறாமல் எள்ளு மற்றும் கடலையின் முத்தாக, கரும்புக் தோட்டங்களை அரணாக கொண்டவையே இக்கொடுமுடி வட்டாரம்.

இது ஈரோடு மாவட்டத்தில் தென்கிழக்கு பகுதியில் அமைந்தது. கொடுமுடி பகுதிகளில் மஞ்சள், நெல், கரும்பு, மரவள்ளி கிழங்கு, எள்ளு, கடலை, தென்னை போன்றவை மிக அதிகமாக பயிரிடப்படுகின்றன. பஞ்சக்காவ்யம் இக்காலத்தின் இயற்கை விவசாயிகளுக்கு ஆணிவேராக உள்ளது. மேலும் காவேரி ஆற்றுடன், நொய்யல் மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் ஆகியவை நீர் ஆதாரமாக விளங்குகின்றன. இத்தகு வட்டாரத்தில் தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டங்களை வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் நிறைவேற்றி வருகின்றன. மேலும் இவ்விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் வழிகாட்டுதலின்படி இயற்கை விவசாயத்தில் பல புரட்சிகளை மேற்க்கொண்டும் இதர விவசாயிகளுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியும் பலருக்கு முன்னோடி விவசாயிகளாகவும் திகழ்கின்றனர்.

**வறுமையிலும் வீழாத இயற்கை விவசாயி :**

கிராம தங்கல் திட்டத்தின் கீழ் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவன மாணவர்களாகிய நாங்கள் கொடுமுடி வட்டாரத்தில் வட்டார வேளாண் அலுவலர் அவர்களின் வழிகாட்டுதலின் படி கப்பம்பாளையம் என்ற கிராமத்தில் இயற்கை விவசாயி திரு. விஜய்சரவணன் அவர்களை சந்திக்க நேரிட்டது.

**மாற்றம் என்பது சொல் அல்ல செயல் !!**

என்ற நம்மாழ்வாரின் வாய்மொழிக்கிணங்க இயற்கை விவசாயத்தில் பல புதுமைகளை மேற்கொண்டு நெல், வெங்காயம், வெண்டை,



மரவள்ளிக் கிழங்கு, வெள்ளரிக்காய் மற்றும் எண்ணெய் வித்துகளான கடலை, ஆமணக்கு போன்ற பயிர்களை கடந்த நான்கு ஆண்டுகளாக பயிரிட்டு அவற்றில் வெற்றியும் கண்டுள்ளார். மேலும் அவர் சொந்த முயற்சியில் பல கரைசல்களை கண்டுபிடித்து பூச்சி விரட்டியாகவும், வளர்ச்சி ஊக்கியாகவும், களைக் கொல்லியாகவும், பயன்படுத்தி வருகிறார். அவற்றுள் மீன் அமிலம், முட்டை ரசம், வெள்ள வேலம்ப் பட்டைக் கரைசல், கற்பூர கரைசல், இயற்கை களைக்கொல்லி, பனைபழம் கரைசல் போன்றவை சிறந்து விளங்குகின்றன.

கொடுமுடி வட்டாரத்தில் இவரை முன்னுதாரனமாக கொண்டு மேலும் முப்பது விவசாயிகள் இயற்கை வேளாண்மை முறையினை செயல்படுத்தி உள்ளனர். மேலும் அவர் மண் வளத்தினை மேம்படுத்துவதும் ஏழை எளிய மக்களுக்கு நல்ல சத்தான இரசாயனம் அல்லாத உணவுப் பொருட்கள் சென்றடைவதே தனது நோக்கமாக கொண்டுள்ளார். வரும் முன் காப்பதே சிறந்தது என்ற பழமொழிக் கேற்ப பயிர்களுக்கு நோய் மற்றும் பூச்சி தடுப்புகளை மேற்க்கொண்டு செயற்கை அல்லாத இயற்கை வழி முறையினை பின்பற்றினாலே இயற்கை விவசாயத்தில் வெற்றி பெறலாம். இவற்றுடன் மண்வளத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் உணர்த்தினார், இயற்கை விவசாயத்தில் நாட்டு மாடுகளின் பங்களிப்பையும் அவற்றின் முக்கியதுவத்தையும் அவற்றின் மூலமே இயற்கை விவசாயம் முழுமையாக்க முடிவும் என்பதை எடுத்துரைத்தார். மேலும் அவருக்கு லயன்ஸ் கிளப் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் சார்பாகத் சிறந்த இயற்கை விவசாயி (The Best Organic farmer) என்ற விருதை வழங்கி கவுரவித்துள்ளது. பல கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் பல கிடைத்தபோதிலும் ஏழை எளிய மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்று அவற்றை தவிர்த்து வருகிறார்.

**இயற்கை களைக்கொல்லி :**

விவசாயிகளுக்கு பெரும் தொந்தரவாக அமைவது களைகளே, இவற்றின் மூலமே பெரும்பாலும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகம் ஏற்படுகின்றன. அது மட்டுமல்லாமல் பயிர்களுக்கு போட்டியகவும் அமைகின்றன.

எனவே, இவற்றினை கட்டுப்பத்துவது முக்கிய அங்கமாக உள்ளது. இக்காலத்தில் இவற்றை கட்டுப்படுத்த வேலையாட்கள் மற்றும் களைக் கொல்லி போன்றவை அதிக செலவீனங்களை ஏற்படுத்துகிறது. எனவே இதற்கு மாற்றாக இயற்கை களைக்கொல்லி சிறந்ததாகவும், எளிமையானதாகவும் கருதப்படுகிறது.

**செய்முறை :**

நாட்டு மாட்டு கோமியம் – 10 லிட்டர் (40 நாட்களுக்கு நொதிக்க வைக்க வேண்டும்.) கடுக்காய் தூள் – 4 கி.கி, எலுமிச்சை – 10

(11 முதல் 15 நாட்களுக்கு மறுபடியும் நொதிக்க செய்தல்) இயற்கை களைக்கொல்லி தெளிப்பின் போது ஒரு கை பிடி நாட்டுச் சர்க்கரை, 25 மி.லி வேப்ப எண்ணெய், 1 லிட்டர் சுண்ணாம்புத் தண்ணீர் மேற்கண்டவற்றுடன் சேர்த்து தெளிக்க வேண்டும்.

இவ்வாறான புதுப்புதுக் கரைசல்களை தன் சொந்த முயற்சி மூலம் செய்து பல விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறார். இவரைப் போன்று இயற்கை வேளாண்மைக்கு நாமும் உயிரூட்டுவோம்! புகழூட்டுவோம்! மலடாய் போன மண்ணென்று ஒதுக்கி விடாமல் விவசாய்மெனும் கருப்பையை உருவாக்க தினமும் உழைப்பினை விதைத்துக் கொண்டிருக்கிறார்.

**விவசாயி!**

இப்படிக்கு கிராம தங்கல் திட்ட மாணவர்கள்,
கொடுமுடி

# காலம் கடந்து பேசக்கூடிய காளான் கதைகள்



குளிர்பிரதேசத்தில் மட்டுமே மொட்டுக்காளான் வளரும் என்று எண்ணிய கருத்தைப் பொய்பித்து. “பொட்டல் காட்டிலும் மொட்டுக்காளான்” வளரும் என்று மெய்பித்து நம்மை ஆச்சரியத்திலும் ஆழ்த்துகிறார் பஷீர் அஹமது. ஊட்டியில் இடைதரகராக செயலாற்றி வந்த இவர் மொட்டுக்காளான் உற்பத்தியிலுள்ள பற்றாக்குறையை அறிந்து உற்பத்தியாளராக மாறினார்.

**தனித்துவமான கட்டமைப்பு :**

குறைவான வெப்ப நிலையில் மட்டுமே வளரும் இந்த காளானை வறண்ட பகுதியான பூமலூரில் வளர்ப்பதற்கு செங்கல் இன்றி, ஓர் புதிய கட்டமைப்பை அமைத்துள்ளார். தெர்மாகோலை நடுவில் வைத்து சுற்றி இருபுறமும் சிமெண்ட் கலவையை பயன்படுத்தி வடிவமைத்துள்ளார். 10X8 என்ற அளவான அறையினுள் குளிரூட்டி வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துகிறார்.

மின்தடை உள்ள நேரங்களில் அறையின் வெப்ப நிலை 24 மணி நேரமும் மாறாமல் இருப்பதற்காக தெர்மாகோல் காப்புப்பொருளாக (இன்சுலேட்டர்) பயன்படுகிறது. மொட்டுக்காளான் வளர்பிற்கு கட்டமைப்பு கட்டும் போது நாம் கவனம் செலுத்த வேண்டிய சில முக்கிய அம்சங்களில் காற்றோட்டமும் ஒன்று.

**மட்கு தயாரித்தல்** **(Compost Preparation)**

குறுகியகால முறையில் (Short Period) மட்கு தயாரித்தல்: இதில் இருநிலைகள் உள்ளன. இவை வெளித்தள மற்றும் உள்தள நிலை. வெளித்தள நிலையில் மட்கு தயாரிக்கத் தேவையான கோதுமை வைக்கோல் துண்டுகளை ஒரு நாள் முழுவதும் தண்ணீரில் ஊறவைத்து போதுமான அளவு கோழி எரு,

ஆமணக்கு, பிண்ணாக்கு மற்றும் ஜிப்சம் (சிறிதளவு) கலந்து குவியல் அமைக்க வேண்டும். ஈரப்பதம் 75 – 77 சதவீதம் இருக்கும் நிலையில், காற்றோட்டம் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு நொதித்த மூலப் பொருட்களை உள்தள நிலையில் அதற்காக அமைக்கப்பட்ட தனி அறைகளில் (Bunker) நிரப்பி இரண்டு நாட்கள் வைத்திருந்தால் நொதித்தல் முழுமை அடையும்.

**தொற்று நீக்கம் :**

இந்நிலையில் மூலப்பொருட்களின் வெப்ப நிலை 58°Cக்கு உயர்த்தி காற்றுப் போக்கிகளை முற்றிலுமாக அடைக்க வேண்டும். ஆனால், சுத்தமான காற்றை அறையினுள் செலுத்திய பின் வெப்பநிலை 58°C அதிகமாகதவாறு பராமரிக்க வேண்டும். ஓரிரு நாட்களில் மட்கி வெப்பநிலை 50°C குறையும். மேலும், சுத்தமான காற்றைச் செலுத்தும்போது அமோனியா நெடி இழந்து, பதமான நிலையை அடையும்.

**படுக்கை தயாரித்தல் (Bed Preparation):**

மொட்டுக்காளான் உற்பத்திக்கு (குளிர் பிரதேசங்களில்) மிதவெப்ப மண்டலங்களில் கீற்று கொட்டகை தேவைப்படும். பூமலூர் போன்ற வெப்பமண்டல பகுதியில் சிறப்பு கட்டமைப்பு தேவைப்படும். காளான் படுக்கைகளை அடுக்குமுறை உருளைப் படுக்கைகளாக தயார் செய்து 80 கிராம் வித்துகளை பரப்பி வித்து பரவும் அறையில் தொங்க விட வேண்டும். பன்னிரெண்டு நாட்களுக்கு 26°C வெப்ப நிலையில் பராமரித்தால் பூசண இழைகள் வளரும்.

**மேற்பூச்சு**

மேற்பூச்சு கலவைக்கு மக்கிய தென்னை நார் (70%) மற்றும் மண்புழு உரம் (30%) கலந்து பார்மலின் (Formalin) கொண்டு தொற்று – நீக்கம் செய்ய வேண்டும். கார அமில நிலை 8.0 இருக்க சுண்ணாம்பு (Lime) சேர்க்க வேண்டும். மேற்பூச்சு கலவை இட்ட பின் படுக்கையின் மீது நாள் ஒன்றுக்கு ஒருமுறை லோசாக தண்ணீர் தெளித்து வர வேண்டும். பின் ஐந்து நாட்கள் கழித்து கரியமில வாயுவை அதிகரிக்க படுக்கையை மூடி வைக்க வேண்டும். அதன்பின் வெண்மை நிற காளான் பூசண இழைகள் மேற்பூச்சு மண் உறையின் மேல் படரும். சுத்தமான காற்றை செலுத்தினால் 10 நாட்களில் காளான் மொட்டுக்கள் (Pinhead) தோன்றும். இவை ஒரு வாரத்தில் அறுவடைக்கு தயாரகிவிடும். தொடர்ந்து தண்ணீர் தெளித்து வந்தால் 6–7 நாட்கள் இடைவெளியில் இரண்டாவது மற்றும் மூன்றாவது அறுவடைகள் கிடைக்கும், சில முறை ஐந்தாவது அறுவடையிலும் நல்ல விளைச்சல் கிடைத்ததாக கூறினார். பஷீர் சராசரியாக ஒரு பைக்கு இரண்டு கிலோ மொட்டு காளான் கிடைக்கும் என்கிறார்.


இப்படிக்கு

கிராம தங்கல் திட்ட மாணவிகள்

பொங்கலூர்.

# தற்சார்பு வாழ்வியல்



இலட்சியத்திற்காக பல இலட்சங்களை அடையாமல் கோடிக்கணக்கான மரங்களை அடையும் நோக்கில் நம்மாழ்வார் பாதையில் ஓடிக்கொண்டிருக்கும் மண்ணின் மைந்தன் யுவராஜ் தற்சார்பு வாழ்வியல் முறைப்படி வாழ்ந்து வருகிறார்.

அதாவது தனது அன்றாட வாழ்க்கைக்கு தேவையான காய்கறிகள், பழங்கள் மற்றும் வீட்டு வருவாயை தான் வளர்க்கும் மரங்கள் மூலம் பூர்த்தி செய்கிறார். இதன் மூலம் வெளியுலகத்தை சாராமல் அனைவருக்கும் ஒரு முன்னோடியாக திகழ்கிறார். மேலும் யுவராஜ் அவர்கள் அரிய வகை மரங்கள், செடிகள் மற்றும் விலையுயர்ந்த மரங்களை தன்னுடைய தோட்டத்தில் வளர்த்து வருகிறார்.

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமத்தைச் சேர்ந்தவர் யுவராஜ், இவர் தனது 16 ஏக்கர் நிலத்தில் 70 வகையான மரங்கள் மற்றும் செடிகளை வைத்துள்ளார். முக்கனிகளான மா, பலா, வாழை மற்றும் குளிர்ச்சி தரும் தென்னை, பனை மற்றும் வைட்டமின் சி (C) க்கு பேர்போன கொய்யா, ஆரஞ்சு, நார்த்தை போன்றவை முதன்மையாகவும் அவருக்கு வருவாய் தருபவையாகவும் உள்ளது.

மேலும் வீட்டுத்தேவைக்காக 1 ஏக்கர் நிலத்தில் நெல் (பொன்னி) சாகுபடி செய்கிறார்.



சிவப்பு நெல்லி



எலுமிச்சை

நெல்லுக்கு கிணற்று பாசனம், மற்றவற்றைக்கு சொட்டு நீர் பாசன முறையை பின்பற்றுகிறார். இவரின் தோட்டத்தில் தென்னை 1200, வாழை 50, பலா 30, கொய்யா 400, நார்த்தை 250, எலுமிச்சை 70, பாக்கு 250 மரங்கள் உள்ளன. அதுமட்டுமின்றி அரிய வகை மரங்களான நோனி, சிவப்பு பலா, ராம் சீதா, அவகாடோ, எலுமிச்சை, அத்தி, ஆப்பிரிக்கா அத்தி, வெள்ளை நாவல், மஞ்சள் சப்போட்டா, நட்சத்திரப்பழம், கருப்பு மா, ஜாதிக்காய், கெப்பல் பழம், பேரிக்காய், விருப்பாக்ஷி வாழை, ஸ்ட்ராபெரி, கொய்யா, பந்தல் உருளை, முள் சீதா (பழங்களின் ஆதாரம்), சாத்துக்குடி, பூந்திக்கொட்டை, சைபேரிக்கா, ஆப்பிள், சிவப்பு நெல்லி, மிளகு, காபி, ப்ளம், கறிப்பலா, வெண்ணெய் மரம், திப்பிலி, ஒட்டுகட்டிய கொய்யா, மா போன்றவை உள்ளன.

மேலும் விலைமதிப்பு மிக்க மரங்களான சந்தன மரம் (25 வருடம்), செம்மரம் (15 வருடம்), ஈட்டி மரம் (10 வருடம்), மகாகனி (8 வருடம்), தேக்கு (20 வருடம்) மற்றும் உலகத்திலேயே அதிக மதிப்புள்ள அகர் மரம் ( 2 1/2 வருடம்) உள்ளன. அகர் மரமானது 10 வது வருடத்தில் அகர் திரவத்தை தரும். ஆனால் 3 வது வருடத்தில் ஊசி மூலம் ஒரு பூஞ்சையை உட்செலுத்தி 6 வது வருடத்திலேயே அகர் செயற்கையாக எடுக்கப்படுகிறது. இதன் மூலம் அகரின் தரம் மாறுவதில்லை. மேலும் யுவராஜ் தனது தோட்டத்தில் மண்புழு உரம் மற்றும் தொழு உரம் தயாரித்து மரங்களுக்கு பயன்படுத்துகிறார். பூச்சித்தாக்கலை புகையிலை, கருவாடு மற்றும் மாட்டு கோமியம் கலந்த கலவையை தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்துகிறார்.

நகரம் எனும் நரகத்தை மறந்து
பனியில் நனைய ஆசை...
கவிகளில் காணும் பச்சை எல்லாம்
கண்களால் காண ஆசை...
பாதை தெரியா நேரங்களிலும்
பயணம் செல்ல ஆசை...
உண்டு தீர்த்தது போதும் இனிமேல்
உழுது பார்க்க ஆசை

எனும் தாரக மந்திரத்தோடு முதுகலை படித்தும் இக்கிராமத்தில் பல கனவுகளோடு அனைவருக்கும் உதாரணமாக தற்சார்பு வாழ்க்கையை மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார் நம் மண்ணின் மைந்தன் யுவராஜ்....

இப்படிக்கு,
கிராம தங்கள் திட்ட மாணவர்கள்,
சென்னிமலை, ஈரோடு மாவட்டம்.




எலுமிச்சை சாகுபடியை மைலம்பாடியை சேர்ந்த விவசாயி சண்முகம் நான்கு ஏக்கர் பரப்பளவில் செய்து வருகிறார். இந்த எலுமிச்சை நாட்டு ரகத்தினை சார்ந்தது. விவசாயி சண்முகம் இயற்கை சான்றிதழுக்கு விண்ணப்பித்து ஆறுதல் சான்றினை பெற்றுள்ளார். சான்றினை பெறுவதற்காக நில வரைப்படம் மற்றும் இயற்கை வேலி போன்ற ஆதாரங்களை சமர்பித்துள்ளார். மண் மற்றும் நீர் பரிசோதனை போன்ற ஆய்விற்கு பின்பு ஆறுதல் சான்றினை பெற்றுள்ளார். எலுமிச்சம் மரக்கன்றானது தென்காசி நர்சரி கார்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஒரு ஏக்கருக்கு நூற்றுஇருபது கன்றுகள் வீதம் நடப்பட்டுள்ளது. எலுமிச்சை இடைவெளியில் 18x20 அடி நடப்பட்டுள்ளது. சொட்டு நீர் பாசனம் மூலம் நீர் பாய்ச்சுதல் மேற்கொள்ளப்படுகின்றது. எலுமிச்சையின் அறுவடையானது மூன்றாவது ஆண்டில் இருந்து தொடங்கப்படுகிறது. பூச்சியை விரட்டுவதற்க்காக மீன் அமிலம் நாற்பது நாட்களுக்கு ஒருமுறை தெளித்து வருகிறார். மேலும் மீன் அமிலத்தினை மீன் கழிவுகள் மற்றும் நாட்டு சர்க்கரையினை கொண்டு தயார் செய்து வருகிறார். செடி வளர்ச்சியூக்கியினை 18 லிட்டர் தண்ணீர் மற்றும் இரண்டு கிலோ நாட்டு சர்க்கரையுடன் கலந்து ஏழு நாட்களுக்கு பிறகு தெளித்து வருகின்றார். போரான் சத்தினை அதிகரிக்க எருக்கு கரைசலினை ஆறு மாதத்திற்கு ஒருமுறை தெளித்து வருகின்றார். நோய் மற்றும் பூச்சியினை கட்டுப்படுத்துவதர்காக சூடோமோனஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி போன்ற உயிரி கட்டுப்பாட்டு தெளிப்பானை நவீன தொழிற்நுட்பமான டுரோன் தொழிற்நுட்பத்தினை பயன்படுத்தி தெளித்து வருகின்றார். களையினை நீக்குவதற்காக களையெடுக்கும் இயந்திரத்தினை பயன்படுத்துகிறார். மேலும் அதன் பிறகு தொழு உரத்தினை பயன்படுத்தி வருகிறார். நிலத்தினை மற்ற விளைநிலங்களில் பயன்படுத்தி வரும் ரசாயன பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லிகள் பரவுதலிருந்து தடுக்க கிழுவன் மரம் என்ற உயிர் வேலியினை அமைத்து வருகிறார். எலுமிச்சம் பழங்களை நேரடியாக விளைநிலத்திலேயே இடைத்தரகர்கள் மூலம் எடுத்து கொள்ளப்படுகிறது. மரத்திற்கு இரண்டாயிரம் பழத்தினை அறுவடை செய்கிறார். மேலும் இயற்கை முறையில் சாகுபடி செய்வதால் நல்ல வருவாயினை ஈட்டி வருகின்றார்.

இப்படிக்கு,
கிராம தங்கள் திட்ட மாணவிகள்
பவானி, ஈரோடு மாவட்டம்

# மூலிகைகளும் அவற்றின் மருத்துவ குணங்களும்

**துளசி : (ஆஸிமம் டெண்யு புளோரம்)**

**மருத்துவ பயன்கள் :**

இருமல், சளி, ஜலதோசம் (ம) தொற்று நீக்கி கிருமி நாசினியாக பல்வேறு வியாதிகளையும் போக்க வல்லது. சரும நோய்களுக்கு துளசி ஒரு சிறந்த நிவாரணி. இலைகளை வேகவைத்து பிழிந்து சாறு எடுத்து 5 மி.லி காலை மற்றும் மாலை சாப்பிட்டு வர பசியை அதிகரிக்கும்.

**தூதுவளை : (சொலானம் ட்ரைலோபேட்டம் )**

**மருத்துவ பயன்கள் :**

தூதுவளையில் கால்சியம் சத்து அதிகம் நிறைந்துள்ளதால் எலும்பையும், பற்களையும் பலப்படுத்தும். தூதுவளை கீரையின் வேர், காய் இயற்கை ஊறுகாய் செய்து நாற்பது நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர கண் எரிச்சல் மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்கும். இலை மற்றும் தண்டுகளை நசுக்கி முதல் நாள் இரவு கொதி நீரில் ஊற வைத்து மறுநாள் குடி நீராகவும் இரசமாகவும் பயன்படுத்த இருமல் மற்றும் இரைப்பு நோய் அணுகாது.

**குப்பை மேனி : (அகாலிஃபா கண்டிகா)**

**மருத்துவ பயன்கள் :**

குப்பை மேனி இலை மற்றும் வேர், வாந்தி பேதியை உண்டாக்கி வயிறு மற்றும் குடலை சுத்தப்படுத்தும் மருந்தாக பயன்படுகிறது. மார்புசளி மற்றும் சுவாசம், கப நோய்கள், கீல் வாதம், முதலியவற்றிற்கும் மருந்தாக பயன்படுகிறது. தோல் நோய்கள் குணமாக குப்பை மேனி இலைச்சாற்றினை தேவையான அளவு மஞ்சள் தூள் சேர்த்து குழைத்து பாதிக்கப்பட்ட இடத்தில் பூசிவர குணமாகும்.

**ஆடாதொடா : (ஜஸ்டீசியா ஆடாதொடா)**

**மருத்துவ பயன்கள் :**

நெஞ்சு சளியை போக்கி உடலை சீரான நிலையில் வைத்துக் கொள்ள உதவும். இதில் பச்சையம் (குளோரோபில்) அதிகமாக இருப்பதால் நெஞ்சு சளி மற்றும் இருமல் போன்றவற்றை உடனே மாற்றும். குத்து இருமல் (ம) தொண்டைக் கட்டு போன்றவற்றை நீக்கும். 48 நாட்கள் இந்த இலையை குழந்தைகளுக்கு கொடுத்தால் எப்பொழுதுமே சளித்தொல்லை உண்டாகாது.

**அருகம்புல் : (சைனோடான் டேக்டைலான்)**

அருகம்புல் சாற்றில் வைட்டமின் A சத்து நிறைந்துள்ளது. இதை உட்கொண்டால் உடல் புத்துணர்வு பெறுகிறது. குழந்தைகளுக்கு பாலில் கலந்து கொடுக்க இரத்தம் சுத்தமாகிறது. மேலும் இதன் சாறு வாயுத்தொல்லை மற்றும் உடல் சூடு தணிக்கும் மருந்தாக பயன்படுகிறது.

**கிழா நெல்லி : (பில்லாந்தஸ் அமராந்தஸ்)**

**மருத்துவ பயன்கள் :**

மஞ்சள் காமாலைக்கு அருமருந்தாகும். கண் நோய், பித்த நோய், சிறு நீர் பெருக்கம், வீக்கம் கட்டி ஆகியவற்றை கரைத்து, நரம்பு, சதை, சொறி, சிரங்கு, நமைச்சல் முதலியன தீரும். தீராத தலைவலி, கல்லீரல் பாதிப்பு, இரத்த சோகை போன்ற நோய்களையும் தீர்க்கவல்ல மருந்தாகும். இதன் இலையுடன் உப்பு சேர்த்து அரைத்து உடலில் தேய்த்து குளித்தால்

தோல் நோய்களான சொறி, சிரங்கு, நமைச்சல் முதலியன தீரும்.

**தும்பை : (யூக்கஸ் ஆஸ்ஃபெரா)**

**மருத்துவ பயன்கள் :**

தும்பை இலையை அரைத்து உட்கொண்டு வெளியிலும் பூசினால் பூரான் கடி விஷம் இறங்கும், அரிப்பு மறையும் பாம்பு கடித்தவருக்கு தும்பை இலையுடன் மிளகு சேர்த்து முதலுதவியாக அளிக்கலாம். நஞ்சு முறிக்கவல்ல மருத்துவ குணம் நிறைந்த இந்த தும்பை மிகவும் சிறந்த மூலிகையாக கருதப்படுகிறது. தும்பை இலையை அரைத்து உட்கொண்டு வெளியிலும் பூசினால் பூரான் கடி விஷம் இறங்கும்.

**தேள் கொடுக்கு : (ஹெலிட்ரோபியம் கண்டிகம்)**
**மருத்துவ பயன்கள் :**

தேள் கொடுக்கு செடியானது பாம்பு கடிக்கு மருந்தாகிறது. இலையை மேல் பூச்சாக பயன்படுத்த தோல் நோய் சரியாகும். தேனீராக குடிக்கும் பொழுது இருமல், சளி, காச நோய் முதலியன சரி செய்யப்படுகிறது. தேள் கொடுக்கு செடி நுண் கிருமிகளை அழிக்க வல்லது. இலையை பயன்படுத்தி தீக்காயங்களுக்கான மேல் பூச்சு மருந்து தயராரிக்கப்படுகிறது.

**சங்குப்பூ : கிளைட்டோரியா ஃடெர்னிஷியா**
**மருத்துவ பயன்கள் :**

இவற்றின் வேரினை அரைத்து சுண்டைக்காய் அளவு எடுத்து பாலில் கலந்து காலை, மாலை குடித்து வர சிறுநீர் பாதை அழற்சி, நீர்கடுப்பு ஆகியவவை நீங்கும். நெய்யில் வறுத்து இடித்த விதைச் சூரணம் 5 முதல் 10 கிராம் எடையளவு வெந்நீருடன் கலந்து கொடுக்க குழந்தைக்காக இலுப்பு, மூர்ச்சை, நரம்பு தளர்ச்சி ஆகியவை தீரும். நீல நிற மை எடுக்க பயன்படுகிறது.

**அம்மான் பச்சரிசி : ஃயூஃபோர்மியா ஹெப்டா**

**மருத்துவ பயன்கள் :**

அம்மான் பச்சரிசிக்கு எரிபுண், நமச்சல் ஆகியவை போகும். இது வயிற்றுப்பூச்சி அகற்றியாகவும், மலமிளக்கியாகவும், வெப்ப தணிப்பானாகவும், சதை நரம்புகளில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கவும் பயன்படுகிறது. இலையை சமைத்து வண்ண சரும வறட்சி அகலும், வாய், நாக்கு, உதடுகளில் ஏற்படும் வெடிப்பு, ரணம் முதலியன தீரும்.

**சிறுகுறிஞ்சான் : ( ஜிம்னிமா சில்வெஸ்ட்ரி )**

**மருத்துவ பயன்கள் :**

சர்க்கரை நோயைக் குணப்படுத்தக்கூடியது. நீரிழிவு நோய் கட்டுப்பட சிறுகுறிஞ்சான் இலைகளுடன் நாவற் கொட்டையை தனித்தனியாக நிழலில் உலர்த்தி இடித்து, தூளாக்கி 1 தேக்கரண்டி தூளை 1 டம்ளர் வெந்நீருடன் கலந்து குடித்து வர வேண்டும். ஒவ்வாமை குணமாக சிறுகுறிஞ்சான் வேரை காயவைத்து தூள் செய்து வைத்துக்கொண்டு தினமும் 1 தேக்கரண்டி சாப்பிட்டு வர வேண்டும். மேலும் உடலில் ஏற்பட்ட நச்சுக்களும் இந்த பொடியை உட்கொள்ளும்போது வாந்தி ஏற்பட்டு விஷம் வெளியாகும்.

மா. பாலகிருஷ்ணன் B.Sc., Botony கும்பகோணம்
அக்ரி கிளினிக் மற்றும் அக்ரி பிசினஸ் பயிற்சியாளர்,
தொகுதி – 2
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.

# நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் அறிக்கை

நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூலம் வேளாண் மற்றும் ஊரக மேம்பாடு என்னும் தலைப்பில் தப்பட்டை கிழவன்புதூரில் ஏழு நாட்கள் (27/02/2022 முதல் 5/03/2022 வரை) சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமின் துவக்க விழாவானது, ஞாயிற்றுகிழமை, காலை 10 மணி அளவில் தப்பட்டை கிழவன்புதூரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திருமதி . வசுமதி, தோட்டக்கலை உதவி இயக்குநர், பொள்ளச்சி வடக்கு ஒன்றியம், மற்றும் திரு. S.நாகராஜன், திட்ட அலுவலர், விரிவாக்க சேவைத்துறை, ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில், கல்லூரியின் முதல்வர், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள், உதவி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊர்பொதுமக்கள் கலந்துகொண்டனர். அதன் தொடர்ச்சியாக டாக்டர். P.R.V. திருமூர்த்தி, M.B.B.S., DA., ராம் பாலி கிளினிக் மற்றும் தலைவர், இந்திய மருத்துவ சங்கம், பொள்ளாச்சி கிளை அவர்களது தலைமையில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றதில் அறுபதற்கும் மேற்பட்ட நபர்கள் பயனடைந்தனர். இரத்த வங்கி, தமிழ்நாடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, பொள்ளாச்சி, இந்திய மருத்துவ சங்கம், பொள்ளாச்சி கிளை மற்றும் கல்லூரி இணைந்து நடத்திய இரத்த தான முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவியர் ஆர்வத்துடன் பங்கேற்று ரத்தம் தானம் செய்தனர். இரத்ததானம் செய்ய முன்வந்த மாணவ மாணவியர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது.

இம்முகாமின் இரண்டாம் நாளன்று காலை 10 மணி முதல் இலவச கண் பரிசோதனை முகாம் தப்பட்டை கிழவன்புதூர் கிராமத்தில் நடைபெற்றது. வாசன் கண் சிகச்சை மருத்துவமனை, பொள்ளாச்சியின் உதவியுடன் நடைபெற்ற இம்முகாமில், ஊர் மக்கள் தங்களது கண்களை பரிசோதித்ததில் நூற்றுக்கும் அதிகமானொர் பயன்பெற்றனர். மேலும் இக்கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ மாணவியர் இணைந்து இவ்வூறாட்சியில் உள்ள, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தின் வெளிப்புற சுவரை தூய்மை செய்து விழிப்புணர்வு ஓவியங்கள் வரைந்தனர்.

சிறப்பு முகாமின் மூன்றாம் நாள் காலை முனைவர். திருமதி. T.R. மஞ்சுளா, தலைவர், பயிர் பாதுகாப்பு துறை மற்றும் முனைவர். A. கார்த்திகேயன், உதவி பேராசரியர் அவர்கள் இணைந்து, கிராமப்புற மக்களுக்கான தேனீ வளர்ப்பு மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிய செயல் விளக்கவுரை அளித்தனர். மதியம் நெகிழிப்பை உபயோக ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது இதில் துணி பைகள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

நான்காம் நாள் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டிகள்

நடத்தப்பட்டன. அதில் அனைத்து வகுப்பு குழந்தைகளும் பங்கு பெற்று மகிழ்ந்தனர். மதியம், முனைவர். P. சந்திரசேகரன், உதவி பேராசிரயர், VIA அவர்கள், தென்னைக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த டானிக் உபயோகம் பற்றிய விழிப்புணர்வை ஊர்மக்களிடையே ஏற்படுத்தினர். அதன்பிறகு தென்னை விவசாயிகளுக்கு வளர்ச்சி ஊக்கிகள் கலந்த டானிக் உபயோகப்படுத்தும் முறை பற்றிய செய்முறை விளக்கம் வேரூட்டம் முறையில் அளிக்கப்பட்டது.

ஐந்தாம் நாள் காலை ஊர் விவசாய பெருமக்களுக்கு இலவச கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் விவசாயிகள் தங்களது கால்நடைகள் மற்றும் வளர்ப்பு பிராணிகளை பரிசோதனை செய்து கொண்டனர். இதன் மூலம் முப்பதிற்கும் மேற்பட்ட நபர்கள் பயனடைந்தனர். மேலும் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் மற்றும் கனிம கலவைகள் வழங்கப்பட்டது. பிற்பகலில் கொரோனா பரவல் பற்றிய விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

ஆறாம் நாள் காலை, உதவிப் பேராசிரியரும், தோட்டக்கலைத் துறைத் தலைவருமான முனைவர். சி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த பந்தல் காய்கறிகள் வளர்ப்பு பற்றி விரிவுரையாற்றினார். கத்தரி, வெந்தயம், தக்காளி, கீரை வகைகள் போன்ற விதைகளை தன்னார்வலர்கள் விதைத்தனர். பள்ளி வளாகத்தில் சூரியகாந்தி, டாலியா, காஸ்மோஸ் போன்ற மலர்கள் விதைக்கப்பட்டன. இந்த நிகழ்வைத் தொடர்ந்து, தன்னார்வலர்கள், கிராமத்தில் அமைந்துள்ள பொது நூலகத்தை சுத்தம் செய்து, வெள்ளை அடித்தனர். பிற்பகல் அமர்வில், இயற்கை மற்றும் மண்புழு உரம் குறித்த சிறப்பு விளக்கவுரை, சுற்றுச்சூழல் அறிவியல் துறை உதவிப் பேராசிரியை செல்வி.எஸ்.பிரியதர்ஷினி அவர்கள் நிகழ்த்தினார்.

இம்முகாமின் நிறைவு விழாவானது (5.3.2022), சனிக்கிழமை, காலை 10 மணி அளவில் தப்பட்டை கிழவன்புதூரில் நடைபெற்றது. இந்நிகழ்வில், திருமதி. கலையரசி, பள்ளி தலைமையாசிரியர், கல்லூரியின் முதல்வர் முனைவர். திரு. N. குமரவடிவேல், திரு. பெரியசாமி கவுண்டர், ஊர் கொத்துக்காரார், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள், உதவி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊர்பொது மக்கள் கலந்து கொண்டனர். அதன் தொடர்ச்சியாக நடந்து முடிந்த போட்டிகளுக்கான பரிசுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள்,
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் மணக்கடவு,
பொள்ளாச்சி✦

# வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில்

## மத்திய அரசின் அக்ரி கிளினிக்ஸ் மற்றும் அக்ரி பிசினெஸ் சென்டார்ஸ் (ACABC) துவக்கவிழா



வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் பல்வேறு விரிவாக்கப் பயிற்சி முகாம்கள் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது . அதில் மத்திய அரசின் திட்டமான அக்ரி கிளினிக்ஸ் மற்றும் அக்ரி பிசினெஸ் சென்டர்ஸ் எனப்படும் 45 நாட்கள் இலவசப் பயிற்சி கல்லூரியில் 29.02.2022 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு துவங்கியது. துவக்க நாளன்று நமது கல்லூரின் முதல்வர் முனைவர் குமாரவடிவேல் அவர்கள் தலைமை தாங்கினார். தொடர்ந்து பேசும் பொழுது இந்த இலவச பயிற்சியினை பயன்படுத்தி வேளாண்மையின் பயன்கள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிந்து தொழில் முனைவோராக உருவாக வேண்டும் என்றார். மேலும் கல்லூரியின் இயக்குனர் முனைவர் கெம்பு செட்டி அவர்கள் முன்னிலை வகித்து பேசும் பொழுது விவசாயத்துறையில் தற்பொழுது தொழில்நுட்பங்கள் மூலம் விவசாயம் செய்தால் பன்மடங்கு இலாபம் பெறலாம் என்றார். இந்தப் பயிற்சியை 45 நாட்கள் முழுமையாக உபயோகித்து தொழில் முனைவோர் அனைவரும் சுயமாக திட்ட அறிக்கை தயார் செய்து அதனை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற திரு எஸ்.ஏ. அருள் ( நிர்வாக இயக்குனர் மதுரை Voluntary Association for People Service (VAPS)) அவர்கள் பேசுகையில் 45 நாட்கள் இலவச பயிற்சி பற்றி முழுமையாக கூறினார். மேலும் இந்தப் பயிற்சியில் சேர்ந்துள்ள அனைவருக்கும் எவ்வாறு தொழில் துவங்க வேண்டும், எவ்வாறு திட்ட அறிக்கை தயாரிப்பது பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும் இந்தப் பயிற்சி முடித்தவுடன் தொழில் துவங்க வங்கிகளை அணுகுவது குறித்தும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நபார்டு மூலம்

மானியம் பெறுவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். ரூபேஷ் (பயிற்சி ஆலோசகர், அக்ரி கிளினிக் மற்றும் அக்ரி பிசினெஸ் சென்டர்ஸ், மேனேஜ் (MANAGE) ஹைதராபாத்) அவர்கள் பேசும் பொழுது அனைத்து தொழில் முனைவோர்களையும் வாழ்த்துக்களுடன் வரவேற்று பேசினார். இனி வரும் 45 நாட்கள் பயிற்சியில் பங்கேற்று தொழில் துவங்கவும், அதன் திட்ட அறிக்கையை சிறப்பான முறையில் சேகரித்து வங்கிகளுக்கு அனுப்ப வேண்டும் என்றும், மானிய திட்டங்களை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். முன்னதாக இந்த விழாவில் வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியின் உதவி பேராசிரியர் மற்றும் நோடல் அதிகாரி, முனைவர் காளிதாஸ் அவர்கள் வரவேற்றுப் பேசினார். மேலும் வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியின் உதவிப் பேராசிரியர்கள் முனைவர். முத்துகிருஷ்ணன், முனைவர். கிருஷ்ணமூர்த்தி, முனைவர். மஞ்சுளா, முனைவர். சங்கரி மற்றும் முனைவர். ரவிக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இவ்விழாவினை சிற்பி பாலசுப்ரமணியம் (ஒருங்கிணைப்பாளர்) மற்றும் ரஞ்சித் குமார் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# வங்கியின் செயல்பாடு மற்றும் வங்கியில் உள்ள கடன் வசதி - சிறப்புரை

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் மூன்றாம் ஆண்டு பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு வங்கியின் செயல்பாடு மற்றும் வங்கியில் உள்ள கடன் வசதிகள் குறித்த சிறப்பு உரை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சிறப்புரையை தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வணிக மேலாண்மை பாடத்திற்காக முனைவர் காளிதாஸ் அவர்கள் ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்விற்கு கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பாரத ஸ்டேட் வங்கியின் வேளாண் பிரிவின் துணை மேலாளர் திருமதி ரம்யா சரவணன் அவர்கள் பங்குபெற்று சிறப்புரையாற்றினார். திருமதி ரம்யா அவர்கள் பேசும் பொழுது மாணவர்களுக்கு வங்கியில் உள்ள வாய்ப்புகள் பற்றியும், வங்கியில் உள்ள கடன் வசதிகள் குறித்தும், தொழில் முனைவோரை உருவாக்குவதற்கு வங்கியின் பங்களிப்பு குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார். மூன்றாம் ஆண்டு மாணவர்கள் மொத்தம் 117 பேர் கலந்து கொண்டு ஆர்வமுடன் கேள்விகள் கேட்டு பயன் பெற்றனர். இறுதியாக மாணவி செல்வி ஸ்ரீ சினேகா அவர்கள் நன்றி உரைத்தார்.

# அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் ஐயா - நூற்றாண்டு பிறந்த தின தொடக்க விழா



அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் ஐயா அவர்களின் நூற்றாண்டு பிறந்த தின தொடக்க விழா வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவனத்தில் 21.3.2022 காலை 9.30 மணி அளவில் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. இதன் முதல் நிகழ்வாக மாரியம்மாள் மேல்நிலைப்பள்ளி மாணவியர் பங்குபெற்று திருவருட்பா மற்றும் திருமுறை பாடல்களை பாடினார். அதன் பின்னர் நிர்வாக கட்டிடத்தில் உள்ள அருட்செல்வர் ஐயா அவர்களின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. டாக்டர் நா மகாலிங்கம் ஐயா அவர்களின் பிறந்த தின தொடக்க விழா கல்லூரியின் முதல்வர் முனைவர் நா. குமாரவடிவேல் அவர்கள் தலைமையில் டாக்டர் NM கட்டிடத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக முனைவர் அமுதன் ஐயா, அவர்கள் பங்கு பெற்று மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்வில் டாக்டர் அருட்செல்வர் ஐயா அவர்கள் மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஆற்றிய தொண்டு பற்றியும் அவருடைய தொலைநோக்கு பார்வை குறித்து எடுத்துரைத்தார். மாணவர்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்குபெற்றனர். முன்னதாக இந்த நிகழ்விற்கு துணை முதல்வர் மா. சிவசாமி ஐயா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மூன்றாமாண்டு மாணவி மனோ மித்ரா அவர்கள் நன்றி உரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச மகளிர் தினம் 2022




மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்னும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் வரிகளுக்குகேற்ப நமது வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் மார்ச் 8ம் தேதி கல்வி, சுகாதாரம், சமத்துவம், வேலை வாய்ப்பு மற்றும் குடும்பம் போன்றவற்றில் பெண்கள் அடைந்துள்ள வெற்றியை நினைவு கூறும் வகையில் சர்வதேச மகளிர் தினம் (இந்த ஆண்டிற்கான கருப்பொருள்: சிறப்பான வாழ்க்கைக்குச் சமநிலை) கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திருமதி. ஜெப்லா, துணை ஆய்வாளர் (கோவை மாவட்ட குற்றப்பிரிவு) அவர்கள் கலந்து கொண்டு பெண்களின் சக்தி, முக்கியத்துவம், வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய முறைகள், சமுதாயத்தில் நடந்து கொள்ளும் விதம், பாதுகாப்பு போன்றவற்றை மிக சிறப்பாக எடுத்துரைத்தார். அத்துடன் திருமதி. ஆனந்தி இளங்கோ, பொது மேலாளர், ஆதி சூர்யா சிறுதானிய பொருள்கள் (பொள்ளாச்சி) அவர்கள் கலந்து கொண்டு பெண்கள் குடும்பம் நடத்தும் முறைகள், குணம், ஒழுக்கம், கலாச்சாரம் போன்றவற்றை மாணவிகளின் நெஞ்சில் பதியும்மாறு எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிகள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியை மாணவர் மன்ற ஆலோசகர் முனைவர் சி. கிருஷ்ணமூர்த்தி ஏற்பாடு செய்திருந்தார்.

# வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவனத்தில் விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி



ஈரோடு மாவட்டம் தூக்கநாயக்கன்பாளையம் வட்ட விவசாய பெருமக்கள் 50 பேர் தோட்டக் கலைத்துறை மூலமாக வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியில் பழப்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, நீரா உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் போன்றவை சம்பந்தமாக ஒரு நாள் பயிற்சியில் பங்கேற்றனர்.

இதில் வேளாண் அபிவிருத்தி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒருங்கிணைத்து நீரா உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் தொடர்பாக விரிவாக்கமளித்தார்.

மேலும் தோட்டக்கலைத் துறையின் தலைவர் முனைவர். சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பழப்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். மண்வளம் மற்றும் அதன் குறைபாடுகள் பற்றி மண்ணியல் துறை தலைவர் முனைவர் முத்துகிருஷ்ணன் அவர்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இறுதியாக நெல் பயிர் செய்யும் முறைகள் மற்றும் நெல் சார்ந்த புதிய தொழில்நுட்பங்கள் பற்றி உழவியல் துறை நிபுணர் மு. ரா. நந்தகுமார் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்

# மறவா நினைவுகளாய் எங்களின் நெல் சாகுபடி

**முன்னுரை :**

நாற்று நட்டு நாடு வளர...
நாளும் தேய்பவன் தான்...
விவசாயி !

தினம் தினம் இவ்வுலகிற்காக ஏர் பிடித்து, வியர்வை சிந்தி பாடுபட்டு உழைத்து, தன் உழைப்பின் பயனாக கிடைத்த நெல்மணிகளை பார்த்து ஆனந்த கண்ணீருடன், உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியுடனும் வாழும் விவசாயிகளின் வாழ்க்கையை நாங்களும் அறிய எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த அனுபவத்தின் பகிர்வே இக்கட்டுரை.

**நாற்றங்கால் அமைத்தல் :**

நாங்கள் பயின்ற முதல் அனுபவமே இந்த நாற்றங்கால் தயாரிப்பு. சேற்றில் கால் வைத்து தன் உழைப்பினைத் தொடங்கும் விவசாயின் நிலை உணர்ந்தோம். 88 செண்ட் பயிரிடத் தேவையான நாற்றங்காலை 8.8 செண்ட் பரப்பளவில் 10 மேட்டுப்பாத்திகள் அமைத்து தேர்வு செய்தோம். முளைக்கட்டிய நெல் விதைகளை நீர் நிறுத்தப்பட்ட மேட்டுப்பாத்திகளில் தூவுதல் முறையில் விதைத்தோம். விதைப்பதற்காக நாங்கள் தேர்ந்தெடுத்த அரிசி ரகம் ADT-53 விதைக்கப்பட்ட விதை முளைத்து வருவதை தினந்தோறும் சென்று பார்த்தோம்.

**மாற்று நடவு :**

நன்றாக வளர்ந்த இளம் நாற்றுகளையும் அதாவது 21 நாள் வயதான பின் வாழை நாற்றினால் சிறு சிறு கட்டுகளாக கட்டினோம். நன்கு உழுது, மாற்று நடவுக்கு தயார் செய்திருந்த நிலத்தில் நாற்றுகளைக் கொண்டு சென்றோம். நாற்றுகளானது, 20 X 15 என்ற இடைவெளியில் பட்டத்திற்கு 12 வரிசைகளாக நடவு செய்தோம். இது எங்கள் விவசாயப் பயணத்தின் புது அனுபவமாக இருந்தது.

**பாடு நிரப்புதல் :**

புதிய சூழலில் மாற்று நடவு செய்யப்பட்ட நாற்றுகள் 5-1 நாட்கள் தங்களின் வாழ்க்கைச் சூழலை அவ்விடத்திற்கு தகுந்தவாறு மாற்றி வளர்ந்தன. சில நாற்றுகளால் அவ்விடச் சூழலைத் தாங்க முடியாமல் இருந்தன. அந்நாற்றுகளுக்குப் பதிலாக புதிய நாற்றுகள் நடப்பட்டன.

**களை மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை :**

மாற்று நடவு நட்ட நாளிலிருந்து நாற்றுகளின் ஒவ்வொரு வளர்ச்சியையும் பார்த்தோம். நாங்கள் அளித்த உரங்கள் மற்றும் நீரினால் நாற்றுகளோடு சேர்ந்து களைகளும் வளரத் தொடங்கின. இக்களைகள் முளைக்கும் போதெல்லாம் களை மற்றும் களைக் கொல்லியைத் தெளித்தோம். தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றை கால இடைவெளிகளில் இட்டோம்.

இந்த உரங்களை அளித்தவுடன் அனைத்து நாற்றுகளும் வெகு சீக்கிரத்தில் வளர்ந்தன. வயல் முழுவதும் பச்சை ஆடை போத்தியதற்ப்போல் காட்சியளித்தன.

**பயிரின் முதிர் பருவம் :**

அனைத்துப் பயிர்களும் நன்கு வளர்ந்தன 90 நாட்களில் வயல் முழுவதும் நெற்கதிர்கள், முத்து முத்தாக விளைந்த நெல் மணிகள்! பசும் பயிர் மேனிக்கு மெருகூட்டும், மணிமகுடமாகும் பொன்மணிகள்! வயல் முழுவதும் தங்க நிறத்தில் காட்சியளித்தன. காற்றுப்போகும் திசையில் கழுத்தை வளைத்து ஏதோ கதைப்பேசிச் சலசலக்கும் கதிர்மணியின் அழகை வரப்பில் நின்று பார்த்துப் பார்த்து மகிழ்ந்தோம். பின், சிறிது நாட்களில் அறுவடை செய்தோம். பயிர்கள் தன்னுடைய முதிர்ச்சிப் பருவத்தில் அனைத்து முற்றிய நெற்கதிர்களும் தலை வணங்கியது. “விதைத்தவன் அழுதான் விதைகளோ எழுந்தது வியர்வை சிந்தியவனின் வேதனை அறிந்த விதைகளோ விதைத்தவனுக்கே தன்னை தலைவணங்கி சமர்பித்தது”!!!

இரண்டாம் ஆண்டு (2019 Batch)
வேளாண்மை பட்டயப் படிப்பு மாணவ / மாணவிகள்
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், பொள்ளாச்சி

# வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் கிராம தங்கல் திட்டத்தின் கண்காட்சி - 2022

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் மாணவர்களுக்கு கிராம தங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக கண்காட்சி மதிப்பீடு 19.04.2022 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக திருமதி. சித்ரா தேவி, வேளாண்மை இணை இயக்குநர், கோவை மற்றும் செல்வி. அருண்யா சக்திவேல், உரிமையாளர், இந்தியன் தேங்காய் தயாரிப்பு, பொள்ளாச்சி ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களின் மாதிரிகளைக் கண்டு மகிழ்தனர். அத்தோடு மதிப்பீடும் வழங்கினர்.

கிராம தங்கல் திட்டத்தின் கீழ் மாணவர்களை 11 குழுக்களாகப் பிரித்து சென்னிமலை, கொடுமுடி, மொடகுறிச்சி, பவானி, அந்தியூர், தூக்கநாயக்கன்பாளையம், பொங்கலூர், தாராபுரம், உடுமலை, கிணத்துக்கடவு, ஆனை மலை ஆகிய வட்டாரங்களுக்கு மாணவர்களை பயிற்சியில் ஈடுபடுத்தினர். அங்கு மாணவர்கள் தாங்கள் கற்று கொண்டதை மாதிரிகளாகச் செய்து கண்காட்சியில் வைத்துள்ளனர்.

தாராபுரம் வட்டார மாணவிகள் காற்று ஆலை, பரண் மேல் ஆடு வளர்ப்பு, நெல் விதை உற்பத்தி அலகு ஆகிய மாதிரிகளைச் சிறந்த முறையில் செய்து கண்காட்சியில் வைத்துள்ளனர்.

தூக்கநாயக்கன்பாளையம் மாணவர்கள் செங்குத்து விவசாயம், ஒருங்கிணைத்த பண்ணை விவசாயம், MYRADA வின் நினைவுத் தோட்டம் போன்ற மாதிரிகள் செய்தனர். பொங்கலூர் வட்டார மாணவிகள் ஸ்பைருளினா உற்பத்தி, மொட்டு காளான் உற்பத்தி, வெங்காயம் விதை உற்பத்தி ஆகிய மாதிரிகள் செய்தனர்

பவானி வட்டார மாணவர்கள் நாட்டு சக்கரை ஆலை, வெற்றிலைத் தோட்டம் ஆகிய மாதிரிகள் செய்தார்கள். கிணத்துக்கடவு வட்டார மாணவிகள் தேங்காய் தூக்கி, ஆவின் பால் பண்ணை ஆகிய மாதிரிகள் செய்தார்கள். சென்னிமலை வட்டார மாணவர்கள் செங்குத்து விவசாயம், ட்ரோன், கொரங்காடு, மீன் வளர்ப்பு போன்ற மாதிரிகள் செய்தார்கள்.

உடுமலை வட்டார மாணவிகள் கோழி குஞ்சு பொறிப்பக அலகு, சக்கரை ஆலை, பிந்தைய அலகு, கரும்பு நர்சரி போன்ற மாதிரிகள் செய்தார்கள்.

கொடுமுடி வட்டார மாணவர்கள் வர்ம கலாச்சார பொருள், ஊறுகாய் புல் தயாரிப்பு அலகு போன்ற மாதிரிகள் செய்தனர்.

அந்தியூர் வட்டார மாணவர்கள் டிராகன் பழத் தோட்டம், திறந்த வெளியில் வெற்றிலைத் தோட்டம் , அதிக அடர்த்தியான வாழை த் தோட்டம் போன்ற மாதிரிகள் செய்தனர்.

ஆனைமலை வட்டார மாணவிகள் மீன் வளர்ப்பு, தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் அணை, ஆனைமலை புலிகள் காப்பகம் போன்ற மாதிரிகள் செய்தனர்.

மொடக்குறிச்சி வட்டார மாணவர்கள் முதலீடு இல்லா ஆடு வளர்ப்பு, அதிக அடர்த்தியான முறையில் கொய்யா தோட்டம், ஆலயம் மாட்டுத்தீவனம் தொழிற்சாலை மாதிரிகள் மற்றும் 30 க்கும் மேலான பாரம்பரிய விதைகளை சேகரித்துள்ளனர். இக்கண்காட்சியானது 19.04.2022 அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள், துணை பேராசிரியர்கள், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவ மாணவிகளும், டிப்ளோமா முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவ மாணவிகளும் மற்றும் விவசாயிகளும் கலந்து கொண்டார்கள். கண்காட்சியை பார்க்க வந்த பார்வையாளர்களுக்கு இறுதி ஆண்டு மாணவர்கள் தங்கள் மாதிரிகளை மிகவும் ஆர்வத்துடன் உற்சாகத்துடனும் விளக்கினார்கள்.

முனைவர் கா. ஆனந்த் மற்றும் முனைவர் கா. சங்கரி
உதவி பேராசிரியர்கள், வேளாண் விரிவாக்கம்
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், பொள்ளாச்சி.



“உழைப்பு என்பது நமது தார்மிகக்கடமை.
நம்மில் யாராவது ஒருவர் வசதியுடன் சுகவாழ்வு நடத்தினால்
அதற்குப் பல ஆயிரம் மக்களின் உழைப்புதான் காரணம்
என்பதை யாரும் உணர மறுக்கிறார்கள்.”

அருட்செல்வர்
நா.மகாலிங்கம்

